

# டிபிகேஎல் நடவடிக்கையின்போது
# கத்தியோடு ஆர்ப்பரித்த
# ஆடவர் கைது





கோலாலம்பூர், ஜூலை 17-

கோலாலம்பூர், டேசா பாண்டான் பகுதியில் உள்ள சட்டவிரோதக் கடைகளை இடித்து தகர்க்கும் கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் (டிபிகேஎல்) ஓப்ஸ் ரோபோ நடவடிக்கையின்போது, அதனைத் தடுக்கும் வகையில் நீண்ட கத்தியை கையில் ஏந்திக் கொண்டு உணர்ச்சிக் கொந்தளிப்பை ஏற்படுத்தக்கூடிய வசனங்களைப் பேசிய நபர் கைது செய்யப்பட்டார்.

முன்னதாக கையில் ஒரு நீண்ட கத்தியை வைத்துக் கொண்டு டிபிகேஎல் அமலாக்க அதிகாரிகளை அவர் இழிவுபடுத்திப் பேசிக்கொண்டே இங்கும் அங்கும் ஆவேசமாக நடைபோட்டுக் கொண்டிருந்த காணொலி சமூக வலைத்தளங்களில் பரவலானது.

அங்கிருந்த சட்டவிரோத கட்டட அமைப்பு ஒன்றை இடித்துத் தள்ளும் நடவடிக்கைக்காக டிபிகேல், தெனாகா நேஷனல் பெர்ஹாட் (டிஎன்பி), சிலாங்கூர் குடிநீர் விநியோக நிறுவனமான ஷபாஸ் அமலாக்க அதிகாரிகள் திரண்டிருந்த அந்த இடத்தில் பாதுகாப்புக்காக காவல்துறையினரும் குவிக்கப்பட்டிருந்தனர்.

முற்பகல் 11.17 மணியளவில் கையில் கத்தியோடு அந்த ஆடவன் அங்கு பிரவேசித்தார். டிபிகேஎல் அமலாக்க அதிகாரிகளை நோக்கி அந்தக் கத்தியை அசைத்து அச்சுறுத்தியதோடு மட்டுமன்றி அவர்களை அவர் ஏசியும் பேசினார். ஆவேசமாகக் காணப்பட்ட அவரை அங்கிருந்த சிலர் ஆசுவாசப்படுத்த முயன்றனர்.

நடவடிக்கையில் ஈடுபட்ட காவல்துறையினர், அசம்பாவிதங்கள் ஏதும் நேராதிருக்கும் பொருட்டு முதலில் அந்நபரிடமிருந்த கத்தியைப் பிடுங்கினர். பின்னர் அந்த 43 வயது ஆடவர் கைது செய்யப்பட்டார். ஆயுதத்தைப் பயன்படுத்தி ஆர்ப்பாட்டம் புரிந்ததால் குற்றவியல் சட்டம் பிரிவு 353 கீழ் இந்த விவகாரம் விசாரிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பில் பொது அமைதியைப் பாதிக்கும் வகையில் ஆருடங்கள் எதனையும் வெளியிட வேண்டாம் என்றும் காவல்துறை பொதுமக்களைக் கேட்டுக் கொண்டது. மேலும் அந்த சர்ச்சைக்குரிய காணொலியைப் பகிர வேண்டாம் என்றும் மக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.